# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 13** **நாள்: 08.02.2017**

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி திட்டம் 06.02.2017 அன்று மாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2017 பிப்ரவரி 6 முதல் பிப்ரவரி 28 வரை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக நடத்தப்பட்டு வருகிறது.

2017 பிப்ரவரி 6ஆம் தேதி நடைபெற்ற தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி முகாமில் அரசு பள்ளிகள், அரசு சார்ந்த பள்ளிகள், தனியார் பள்ளிகள் என பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 137 பள்ளிகளில் 33,994 குழந்தைகளுக்கு தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி அளிக்கப்பட்டது. தடுப்பூசி அளிக்கப்பட்ட அனைத்து குழந்தைகளும் நலமாக உள்ளனர். 07.02.2017 அன்று ஒரு தனியார் பள்ளியில் ஒரே நாளில் 752 குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி அளிப்பதனால் குழந்தைகளுக்கு இரண்டு உயிர் கொல்லி நோய்களான தட்டம்மை மற்றும் ரூபெல்லாவிலிருந்து வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு கிடைக்கின்றது. எனவே, தாய்மார்கள் எவ்வித தயக்கமும், பயமுமின்றி, இத்தடுப்பூசி திட்டத்தில் கலந்துக்கொண்டு, தங்களுடைய 9 மாதக் குழந்தை முதல் 15 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தட்டம்மை – ரூபெல்லா தடுப்பூசி போட்டுக் கொண்டு பயன்பெறுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**